1970 செப்டம்பர் 3]

Ceiling on rice stock with dealers

* 222 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state:

(a) whether the Government has prescribed a ceiling for rice stocks held by Foodgrains dealers in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) உணவு தானிய வியாபாரிகள் அரிசி இருப்பு வைத்திருப்பதற்கான உச்சவரம்பு ஒன்றும் இந்த அரசு விதிக்கவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நெல் அரிசி வியாபாரத்தில் பலர் ஆயிரக்கணக்கான மூட்டைகளைப் பதுக்குவதன் மூலம் நாட்டிலே ஏற்படும் உணவுப் பஞ்சத்தைத் தடுக்க இனியாவது அரசாங்கம் உச்சவரம்பை வைக்க உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 40 குவிண்டால் நெல்லோ அல்லது 25 குவிண்டால் அரிசியோ அதற்குமேல் இருந்தால் அதற்குண்டான கணக்குகளை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறது. எவ்வளவு வைத்திருக்கலாம் என்பதற்கு உச்சவரம்பு இல்லை. கணக்கிருந்தால் போதும் என்று வைத்திருக்கிறோம்.

கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, இந்த நெல்-அரிசி வியாபாரிகள் அவர்கள் கொள்முதல் செய்யும் நெல்லையோ, அரிசியையோ 15 தினங்களுக்கு மேல் இருந்தால் அரசாங்கத்திற்கு பாக்கியிருக்கும் நெல்லை விட்டுவிட வேண்டுமென்று ஏற்கெனவே அரசாங்கம் அறிவித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக்கேள்வி போடவும்.

அரியலூர் பகுதியில் கிடைக்கும் ஜிப்சம் படிவங்கள்

*223. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், அரியலூர் பகுதியில் கிடைக்கும் ஜிப்சம் கல்லைக்கொண்டு தொழிற்சாலை ஏதேனும் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

காஞ்சீபுரத்தில் சரிகைத் தொழிற்சாலை

*224. வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்தில் சரிகைத் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு மாநில அரசிற்கு அனுமதி அளித்துள்ளதா?

(இ) இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?